9th July 1962]

திரு. பி. முருகையன் : கனம் அமைச்சர் அவர்கள், 'இல்லை' என்று கூறியதற்குக் காரணத்தை நான் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கே பூகர்ப்ப ஆராய்ச்சி நடத்துகிறார்கள். அங்கு வெட்டிப் பார்த்ததிலே, 23 சத விகிதத்திலிருந்து 37 சத விகிதத்திற்குக் குறைவான இரும்புக் கனிதான் இருக்கின்றது. இருப்பதும் மிகக் குறைவானது. இருக்கின்ற அளவைப் பார்த்தால், ஐம்பதாயிரம் டன்தான் மொத்தமே இருக்கும் போல் இருக்கிறது. ஐம்பதாயிரம் டன் கனிப்பொருள் என்பது ஆலைக்கு ஒரு நாளுக்குக்கூடப் போதாது.

ஆசிரியர் சம்பள விகிதம்.

* 195 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் ஜில்லாவாரியாக எத்தனை செகண்டரி கிரேட் அல்லது சீனியர் பேசிக் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஹையர் கிரேடு சம்பளம் பெற்று வேலை செய்துவருகிறார்கள்?

(இ) செகண்டரி கிரேடு அல்லது சீனியர் பேசிக் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எத்தனை பேர் ஹையர் எலிமெண்டரி பாடசாலைகளில் 5-வது வகுப்பு ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்கள்?

(உ) அவர்களுக்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்க்குரிய சம்பள விகிதம் கிராண்ட் வழங்கப்படுகிறதா?

(எ) இல்லையென்றால், காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (இ) The time and labour involved in gathering these particulars may not be commensurate with the object in view.

(உ) & (எ) If the teachers were appointed in aided elementary schools before 1st April 1958 or if they are working in sanctioned secondary grade posts they will be assessed for grants in the secondary grade scale. Otherwise, they will be assessed for grants in the higher elementary grade scale only.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஹைஸ்கூல்களிலும் ஐந்தாவது ஸ்டாண்டர்டு இருக்கிறது. எலிமெண்டரி ஸ்கூல்களிலும் ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்களிலும் ஐந்தாவது ஸ்டான்டர்டு இருக்கிறது. செகண்டரி கிரேட் டீச்சர் நியமனம் ஆவதற்கு 'ஸாங்ஷண்டு போஸ்ட்'-ஆக இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. எலிமெண்டரி ஸ்கூலிலும் ஹைஸ்கூலிலும் 5-வது வகுப்பில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்தான் இருக்க வேண்டும். ஹையர் எலிமெண்டரி ஸ்கூலில் இருக்கக்கூடிய ஐந்தாவது ஸ்டாண்டர்டில் யாரும் இருக்கலாம்—ஹையர் கிரேடாகவும் இருக்கலாம். ஸ்டான்டர்டில் ஹையர் கிரேடாகவும் இருக்கலாம் செகண்டரி கிரேடாகவும் இருக்கலாம் என்பது முறைதானா? அப்படியிருக்குமானால், அதை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்?

[9th July 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம்: செகண்டரி கிரேடாக இருந்தால் நலம்தான்—செகண்டரி கிரேட் உபாத்தியாயர் வருவதாக இருந்தால், செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வருவதாக இருந்தாலும் வரட்டும் என்று சொல்கிறோம். ஆகையால், இதை மாற்றுவதற்கு அவசியம் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர்: இந்த ஆண்டு முதல் ஆரம்பப் பள்ளிகளில் நான்காவது வகுப்பிலிருந்தே ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று சர்க்கார் நிபந்தனை விதித்திருக்கிறது. நான்காம் வகுப்பில் ஹையர் கிரேட் உபாத்தியாயர்களால் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க முடிவதில்லை. செகண்டரி கிரேட் உபாத்தியாயர்கள் போட்டால்தான் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க முடிகிறது. ஆகையால், புதிதாக நியமிக்கும்போது, அவர்களுக்கு செகண்டரி கிரேட் ஆசிரியர் சம்பள விகிதம் கொடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கிற விஷயம் தனி விஷயம். அதற்குப் பயிற்சி எல்லாம் நடைபெறுகின்றது. ஆகையால், அதை வைத்துக்கொண்டு நான் முன்பு சொன்ன ஒரு முடிவை மாற்றிக்கொள்வதற்கு அவசியம் இல்லை.

Sri C. CHIRANJEEVULU NAIDU: In view of the fact that some of the untrained teachers who have been educated only up to IV Form are being entertained in panchayat union schools, may I request the Government to issue necessary definite instructions that panchayat unions should entertain only trained teachers when there are vacancies in panchayat union schools?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Panchayat unions are of course expected to have only trained teachers. But that depends on the question of availability.

திரு. எம் எஸ். செல்வராஜன்: ஒரு பாடசாலையில் ஹையர் கிரேட் ஆசிரியராக வேலை பார்த்துவரக்கூடிய ஒருவர், சுய முயற்சியில் செகண்டரி கிரேட் பரீட்சை பாஸ் செய்துவிடுவாரானால், மெட்ராஸ் எஜுகேஷனல் ரூல்ஸ் பிரகாரம், அவர் அந்தப் பரீட்சை எழுதிய தேதியிலிருந்து செகண்டரி கிரேட் சம்பளம் பெறத் தகுதியுடையவராகிறார். 'He is entitled to get Secondary Grade scale', என்ற அளவுக்கு அவர் செகண்டரி கிரேட் சம்பளம் பெறுவதற்கு உரியவராக இருக்கிறபோது, இது போன்று 'சாங்ஷண்டு போஸ்டு அல்லாதது' என்பதன்பேரில், அவர்களுக்கு மெட்ராஸ் எஜுகேஷனல் ரூல்ஸுக்குப் புறம்பாக சம்பளம் கொடுக்கப்படுமானால், அதை நிவர்த்திக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்? இது முரண் அல்லவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுது அமுலில் இருக்கிற விதிகளுக்குள் முரண்பாடுகள் இருப்பதைப்பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் அதைப் பார்த்து பதில் சொல்லலாம்.

திரு. க. தா. பெருமாள் ராஜு: ஹையர் கிரேட் ஆசிரியர் பயிற்சித் திட்டம் எடுக்கப்படுமா?

9th July 1962]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றி இப்பொழுது முடிவு ஒன்றும் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம்.

Selections for Government service (police verification)

* 196 *Q.*—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether persons belonging to certain political parties are debarred from selections for the posts for which verification by the police is conducted before a candidate is appointed; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.
(*b*) Does not arise.

The Cauvery basin (oil)

* 197 *Q.*—SRI M. KALYANASUNDARAM :
SRI RAMA ARANGANNAL :
SRI A. K. SUBBIAH :
SRI K. A. MATHIALAGAN :
} Will the Hon. the Minister for Industries be pleased to state the present stage of the scheme for exploration of oil in the Cauvery basin?

THE HON. SRI R. VENKATARAMAN : Seismic survey of certain portions of the Cauvery basin carried on by the Oil and Natural Gas Commission of the Government of India is still in progress and is likely to continue for some more time.

திரு. சா. கணேசன்: தேவக்கோட்டை பகுதியில் இது மாதிரி எண்ணெய் வளம் நிரம்ப இருக்கிறது என்று அந்த ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் எண்ணெயின் மாதிரியையும் அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தார் என்று செய்திகள் வந்தன. அதுபற்றி ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா? அதனுடைய பயன் என்ன? விளைவு என்ன என்று அரசாங்கம் கருதுகிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தமாதிரி தகவல் ஜியலாஜிகல் டிபார்ட்மெண்டிலிருந்து வரவில்லை. ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸரிடமிருந்து வருவதைப் பொறுத்தவரையில் நாம் ஒன்றும் செய்ய முடியாது. இப்பொழுது நமக்கு இருக்கின்ற தகவல் பூராவும், 'காவிரி பேஸின்' என்று சொல்கிற தஞ்சை ஜில்லாவும், திருச்சி ஜில்லாவின் ஒரு பகுதியும், வங்காளக்குடா அருகிலுள்ள பகுதியும்தான். இவைதான் எண்ணெய் இருக்கக்கூடிய இடங்கள் என்று சொல்லப்படுகிறது.

திரு. சா. கணேசன் : நில நூல் வல்லுநர்கள் முடிவுதான் சரியானது என்பதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அவர்கள் சென்று காணவோ கவனிக்கவோ முடியாத இடங்களிலே, 'இத்தகைய வாய்ப்புகள் இருக்கின்றன' என்று அரசாங்க அதிகாரிகள் எடுத்துக் காட்டுவார்களானால், அதை நில